**People's Watch**
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452 - 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

31.08.11

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 20.08.2011 முதல் 31.08.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**20-08-2011 முதல் 31-08-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 1 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 45 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 8 |
| 5. | வகுப்பறை வன்முறை | 7 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 3 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 6 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 1 |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | 3 |
| 11. | குழந்தை திருமணம் | – |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 11 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 1 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | 1 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 1 |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 2 |
| 17. | மணல் கொள்ளை | 6 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | 1 |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | 1 |

| | | |
|---|---|---|
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | 1 |
| 22. | பொதுவானவை | 1 |
| | மொத்தம் | 100 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-33
# 20.08.2011 முதல் 31.08.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 2119. | 20.08.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் கப்பலூர் கீழத்தெருவைச் சேர்ந்த சிவா, பாப்பா, பாக்கியம் மற்றும் பாண்டியம்மாள் வீடுகளிலிருந்த 53 மூடை ரேசன் அரிசி, சீனி, மாவு உள்ளிட்ட ரேசன் பொருட்கள் அதிகாரிகளின் சோதனையில் போது பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினமணி |
| 2120. | 20.08.2011 | **சென்னை மாவட்டம்:** மந்தைவெளிபாக்கத்தைச் சேர்ந்த கிறிஸ்டோபர்காந்தி(42) மனைவி ஆரோக்கியமேரி ரோஸி(25). கிறிஸ்டோபர் காந்தி ஏற்கனவே இரண்டு திருமணம் செய்துக் கொண்டதை மறைத்து தன்னை 3 வதாக திருமணம் செய்ததோடு, 4 வது ஒரு பெண்ணை திருமணம். அதைத் தட்டிக் கேட்ட தன்னை எரித்துக் கொலை செய்ய முயற்சித்தாக ஆரோக்கியமேரி ரோஸி புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினத்தந்தி |
| 2121. | 20.08.2011 | **சேலம் மாவட்டம்:** சேலத்தை சேர்ந்த மகாராஜா, அம்மாபேட்டையில் இருந்து சேலம் டவுனுக்கு மோட்டார் சைக்கிளில் வந்தார். வண்டிக்கான இன்சூரன்ஸ் மகாராஜாவிடம் இல்லாததால் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த சப் –இன்ஸ்பெக்டர் குமாரசாமி, மற்றும் ஏட்டுகள் செல்வம், பழனிசாமி மூவரும் வழக்குப் பதிவு செய்யாமல் இருக்க ரூபாய் 500 லஞ்சம் கேட்டதாக மகாராஜா புகார். மூவரும் கைது. | லஞ்சம் | தினத்தந்தி |
| 2122. | 20.08.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ஆர்.எஸ்.மடையைச் சேர்ந்த கருப்பையா(65) மகன் மாரீஸ்வரன். கருப்பையா தனக்குச் சொத்து தரவில்லை என இருவருக்கும் நடந்த குடும்ப தகராறில் ஆத்திரமடைந்த மாரீஸ்வரன் தந்தையை மின்சாரம் பாயச்சி கொலை செய்ய முயன்றதாக புகார். மாரீஸ்வரன் கைது. | முதியோர்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினமலர் |
| 2123. | 20.08.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** சின்னகாஞ்சிபுரம் திரப்புக்குடல் தெருவைச் சேர்ந்த ஜெயஸ்ரீ மகன் அரவிந்த்அர்சித்(13). வீட்டில் தனியாக இருந்த மாணவனை மர்ம நபர்கள் முகத்தை பாலீதின் கவரால் மூடி கழுத்தை நெறித்துக் கெலை செய்ததாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 2124. | 20.08.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி மாமரத்துப்பட்டியைச் சேர்ந்த தங்கப்பாண்டி(31) மனைவி ரம்யா(28). கணவர் மற்றும் | பெண்கள் மீதான வன்முறை& | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | உறவினர்கள் கூடுதல் வரதட்சணை கேட்டுத் துன்புறுத்தியதாக ரம்யா புகார். | வரதட்சணைக் கொடுமை | |
| 2125. | 20.08.2011 | **வேலூர் மாவட்டம்:** திருப்பத்தூர் அடுத்த மாக்கனூர் கிராமத்தைச் சேர்ந்த கவிதா மகன் பிரதீப்(16). வாணியம்பாடியில் உள்ள தனியார் பள்ளியில் உள்ள செட்டியப்பனூர் ஆதரவற்றோர் விடுதியில் தங்கி 9ம் வகுப்பு படித்து வந்தார். விடுதியில் உள்ள கிணற்றில் பிரதீப் சடலமாக மிதந்ததாகப் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 2126. | 20.08.2011 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை இ.பி.காலனியைச் சேர்ந்த பல் மருத்துவர் சிபு மனைவி மீனாட்சி. கணவர் கூடுதல் வரதட்சணை கேட்டுத் துன்புறுத்தியதாக மீனாட்சி புகார். சிபு கைது. | பெண்கள் மீதான வன்முறை& வரட்சணைக் கொடுமை | தினகரன் |
| 2127. | 20.08.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** செம்பட்டி அருகே உள்ள சித்தையன்கோட்டை காலனியைச் சேர்ந்த செந்தில்குமார்(30) மனைவி அறிவழகம்(22). செந்தில்குமார் போதையில் தகராறு செய்ததாகப் புகார். சிறையில் அடைக்கப்பட்ட செந்தில்குமாரை அறிவழகம் ஜாமீனில் எடுக்காததால் ஆத்திரமடைந்த செந்தில்குமார் வெளியே வந்து அறிவழகத்தை கம்பியால் குத்திக் கொலை செய்ததாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 2128. | 21.08.2011 | **நாகை மாவட்டம்:** அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கியதோடு, அவர்கள் பிடித்துவைத்திருந்த மீன்களைப் பறித்ததோடு பழனிச்சாமி(30) பாலையா, ஜெகன் என்ற வெங்கடேசனை இலங்கை கடற்படையினர் கத்தியால் குத்தியதாக மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினமணி |
| 2129. | 21.08.2011 | **மதுரை மாவட்டம்:** செக்கானூரணி அருகே வாகனசோதனையின் போது அனுமதியின்றி மணல் அள்ளி வந்த 2 டிராக்டர் பறிமுதல். டிரைவர் மாயாண்டி, சுரேஷ், காக்கிவீரன் கைது. | மணல் கொள்ளை | தினகரன் |
| 2130. | 21.08.2011 | **மதுரை மாவட்டம்:** சிவகங்கையைச் சேர்ந்த அதியமான் மனைவி லட்சுமி(30). கணவன், மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த லட்சுமி வீட்டைவிட்டு வெளியேறினார். மதுரை மாட்டுத்தாவணியில் பேருந்து நிலையத்தில் சுற்றித்திரிந்த லட்சுமியை சமூக விரோதிகளிடமிருந்து செஞ்சிலுவைச் சங்கத்தினர் மீட்டனர். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2131. | 21.08.2011 | **மதுரை மாவட்டம்:** கருப்பாயூரணி அருகே விளத்தூர் காலனியைச் சேர்ந்த கணேசன் மனைவி அழகம்மாள்(27). அழகம்மாளை கருவை கலைக்கச் சொல்லி கணவன் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதக அழகம்மாள் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| 2132. | 21.08.2011 | **தேனி மாவட்டம்:** போடி பழைய பேருந்துநிலையம் அருகேயுள்ள அன்னை சர்ச்சில் பிறந்து 7 நாட்களே ஆன நிலையில் பெண் குழந்தை கிடந்ததாகப் புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2133. | 21.08.2011 | **மதுரை மாவட்டம்:** வண்டியூர் மாந்தோப்பு மெயின்ரோடு பகுதியைச் சேர்ந்த சதாம்உசேன் மனைவி சித்ரா. இருவரும் காதலித்துத் பெற்றோர் எதிர்ப்பை மீறி திருமணம் செய்துக் கொண்டனர். இருவரின் பெற்றோரும் காவல்நிலையத்தில் புகார். கருப்பாயூரணி எஸ்.எஸ்.காலனி காவலர்கள் தங்களுக்கு தொந்தரவு கொடுப்பதாக சதாம்உசேன் புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 2134. | 21.08.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் கரடிக்கல் ஒத்தவீட்டைச் சேர்ந்த நல்சுந்தன்(29). செக்கானூரணி பசும்பொன் தெருவைச் சேர்ந்த காட்டுராஜா(30) விடம் ரூ. 12 ஆயிரம் கடன் வாங்கியிருந்தார். கடந்த சில மாதங்களாக நல்சுந்தனால் வட்டி கட்டமுடியாததால் ஆத்திரமடைந்த காட்டுராஜா நல்சுந்தான் குடியிருந்த வீட்டின் கதவைப் பூட்டி சென்றதாக புகார். | கந்துவட்டிக் கொடுமை | தினத்தந்தி |
| 2135. | 22.08.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இந்திய எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் படகுகளை சோதனையிட்டதோடு, அவர்கள் மிரட்டி அனுப்பியதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2136. | 22.08.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரம் ஏர்வாடி அடஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த முனியாண்டி மனைவி நம்பிச்செல்வி(25). மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு ஆத்திரமடைந்த முனியாண்டி நம்பிச்செல்வியை அரிவாளால் வெட்டிக் கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 2137. | 22.08.2011 | **மதுரை மாவட்டம்:** பி.டி.ராஜன் ரோடு பகுதியைச் சேர்ந்த ரமேஷ் மனைவி உமாமகேஸ்வரி(31). கணவன் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரட்சணை கேட்டுத் துன்புறுத்தியதாக உமாமகேஸ்வரி புகார். | பெண்கள் மீதான வன்முறை& வரதட்சணைக் கொடுமை | தினமணி |
| 2138. | 22.08.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம், ஆத்தூர் நகரம் 32வது வார்டுக்குட்பட்ட அம்பேத்கர் நகரில் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர்கள் வசிக்கின்றனர். அம்பேத்கர் நகரில் மகாலிங்கம் என்பவர் நிலங்களை விலைக்கு வாங்கி பிளாட் பேட்டுள்ளார். தலித்மக்களுக்கு அந்த நிலங்களை விலைக்கு கொடுக்காமல் தனது | தலித்துகள் மீதான வன்முறை | ஜனசக்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலத்தை சுற்றி தலித்துகள் உள்ளே வரகூடாது என தீண்டாமை சுவர் எழுப்பியுள்ளதாக புகார். | | |
| 2139. | 22.08.2011 | **நாகை மாவட்டம்:** சீர்காழியில் வீட்டில் தனியாக இருந்த இரண்டு பெண்கள் படுகொலை. குற்றவாளிகளை கைது செய்யக்கோரி கிராம மக்கள் வலியுறுத்தல். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | கலைஞர் டிவி |
| 2140. | 22.08.2011 | **சென்னை மாவட்டம்:** சோழிங்கநல்லூர் ஐடிஐ மாணவர் மீது காவல்துறையினர் தாக்குதல். உயிருக்கு ஆபத்தான நிலையில் மாணவன் மருத்துவமனையில் அனுமதி. | காவல் நிலையச் சித்திரவதை | கலைஞர் டிவி |
| 2141. | 23.08.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** திருவைக்குண்டம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பிளஸ் 2 பயிலும் மாணவி இசக்கிதேவி. சுதந்திரதின நாளில் திருச்செந்தூரில் நடந்த ஓவியப்போட்டியில் கலந்துக் கொள்ள இசக்கிதேவி சென்றுவிட்டார். சுதந்திர தினத்தன்று பள்ளிக்கு வராததால் வகுப்பிற்கு வெளியே முழங்காலிட்டு தண்டனை வழங்கி உள்ளார் உதவி தலைமை ஆசிரியர் செந்தூர் கனி. வகுப்புத் தேர்வில் திட்டமிட்டு மதிப்பெண் குறைத்ததோடு மற்ற மாணவிகளிடருந்தும் பிரித்து உட்கார வைத்துச் சித்திரவதை. மனமுடைந்த மாணவி விஷம் குடித்துத் தற்கொலைக்கு முயற்சி. | வகுப்பறை வன்முறை | டெக்கான் கிரானிக்கல் |
| 2142. | 23.08.2011 | **விருதுநகர் மாவட்டம்:** திருச்சுழி அருகே உள்ள கிழகண்டமங்கலம் இங்கு ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் காலனி வீடுகள் உள்ளன. தலித் மக்கள் பயன்படுத்திய நடைபாதையை அதே பகுதியைச் சேர்ந்த ஆதிக்கச்சாதியைச் சேர்ந்த ஒருவர் மறித்துள்ளதாகவும் அதை மீட்டுத்தரும்படி தலித் மக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 2143. | 23.08.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே தொட்டப்பநாயக்கனூரைச் சேர்ந்த வேல்முருகன் மனைவி சாந்தினி(19). கணவர் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாக சாந்தினி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினமணி |
| 2144. | 23.08.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை ஈக்காட்டுத்தாங்கலைச் சேர்ந்த கணேஷ்(43) மனைவி பொன்மணி. உறவினர் சரவணன் என்பவருடன் சேர்ந்து மருத்துவமனை ஆரம்பித்துள்ளனர். சரவணன், பொட்டு சுரேஷ், இருவரும் பொன்மணியை மிரட்டி மருத்துவமனையை தங்கள் பெயருக்கு எழுதி | பெண்கள் மீதான வன்முறை & மோசடி | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வாங்கியதாகப் புகார். பத்திரிப்பதிவு அலுவலர் அண்ணாமலை இதற்கு உடந்தையாக இருந்தாக புகார். | | |
| 2145. | 23.08.2011 | **சென்னை மாவட்டம்:** வில்லிவாக்கம் நாராயனமேஸ்திரி தெருவைச் சேர்ந்த கார்த்திகேயன்(30) அதே பகுதியைச் சேர்ந்த ஸ்ரீதேவி(28) இருவரும் காதலித்தனர். இருவரின் பெற்றோர் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் மனமுடைந்த காதலர்கள் இருவரும் தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 2146. | 23.08.2011 | **மதுரை மாவட்டம்:** ஐராவதநல்லூரைச் சேர்ந்த முத்துமாரியின் மனைவி நளினி. 3 மாத கர்ப்பிணியான நளினியை கணவர் கருவைக் கலைக்கச் சொல்லி துன்புறுத்தியதாக நளினி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2147. | 23.08.2011 | **மதுரை மாவட்டம்:** எம். கல்லுப்பட்டி அருகே அனுமதியின்றி மணல் அள்ளி வந்த டிராக்டரை எஸ்.ஐ ஆனந்தி தலைமையில் காவலர்கள் வாகன சோதனையில் ஈடுபட்டனர். டிராக்டர் உரிமையாளர் மூர்த்தி, கருப்பையா இருவரும் காலர்கள் மீது டிராக்டரை எற்றிக் கொலை செய்ய முயன்றதாகக் கைது. | மணல் கொள்ளை & கொலை முயற்சி | தினகரன் |
| 2148. | 23.08.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரையைச் சேர்ந்த துரியோதனன். இவர் குடும்பதுடன் வெளியூர் செல்ல ரயில்வே ஸ்டேசன் சென்றபோது அவரது 4 வயது மகளின் கழுத்தில் கிடந்த செயினைப் பறிக்க முயன்ற திருப்பூர் பல்லடம் ராயப்பாளையம் அபிராமி நகரைச் சேர்ந்த இப்ராகிம் கைது. | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 2149. | 23.08.2011 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சி மரப்பேட்டை வீதியைச் சேர்ந்த முத்துக்குமார்–புஷ்பலதா தம்பதியினரின் மகன் ராஜ்குமார்(13) (மாற்றுத்திறனாளி). பெற்றோர் மற்றும் உறவினர்களால் கைவிடப்பட்ட சிறுவன் காப்பகத்தில் சேர்ப்பு. | குழந்தைகள் மீதான வன்முறை & மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2150. | 23.08.2011 | **சேலம் மாவட்டம்:** ஓமலூர் அருகே உள்ள முத்தம்பட்டி வீரியன்தண்டா பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் மனைவி கீதா(23). தனது கணவர் எற்கனவே மூன்று திருமணம் செய்து தன்னை ஏமாற்றி 4 வதாக திருமணம் செய்துக் கொண்டதாகப் புகார் கொடுத்தும் காவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என கீதா புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 2151. | 23.08.2011 | **மதுரை மாவட்டம்:** பெரியகுளம் அருகே | பெண்கள் | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கருத்தப்பட்டி சிந்தியம்மன்கோவில் தெருவைச் சேர்ந்த கணேசன் மனைவி அன்னலெட்சுமி. கணேசனின் தந்தை கதிரேசன்(53) தனது ஆசைக்கு இணங்க மறுத்த அன்னலெட்சுமியை கழுத்தை நெறித்துக் கொலை செய்ததகா கதிரேசன் கைது. | மீதான பாலியல் வன்முறை & கொலை | |
| 2152. | 23.08.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கிருஷ்ணபுரம் காலனி பாரதிநகர் பகுதியைச் சேர்ந்த ஆவுடையப்பன் மகள் வீரலெட்சுமி(16) பிளஸ் 1 படித்து வந்தார். பெற்றோர் திட்டியதால் வீரலெட்சுமி தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | மாலைமுரசு |
| 2153. | 23.08.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** நிலக்கோட்டை அருகே மல்லியம்பட்டியைச் சேர்ந்த செல்வம்(25) மனைவி அங்கம்மாள் மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த அழகேஸ்வரி இருவரும் வரும்பொழுது பாறைப்பட்டியைச் சேர்ந்த சிவா(22), தவராஜா, இளையராஜா, மூவரும் அங்கம்மாள், மற்றும் அழகேஸ்வரியை பைக்கில் வந்த இடித்ததாக புகார். இரு கிராமங்களிடையே மோதல். | பெண்கள் மீதான வன்முறை & மோதல் | தமிழ்முரசு |
| 2154. | 23.08.2011 | **தேனி மாவட்டம்:** பத்ரகாளிபுரம் கிராமத்தைச் சேர்ந்த புவனேந்திரன் மகள் ஜெயந்தி(22). வீட்டில் ஜெயந்திக்கு திருமணம் ஏற்பாடு செய்தனர். மாப்பிள்ளை பிடிக்காததால் மனமுடைந்த ஜெயந்தி கிணற்றில் குதித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்முரசு |
| 2155. | 24.08.2011 | **மதுரை மாவட்டம்:** மானகிரியில் உள்ள ரேசன் கடையில் கடத்திவைக்கப்பட்டிருந்து 47 மூடை ரேசன் அரிசி பறிமுதல். விற்பனையாளர் ஜோதிபாசு, அம்மாவாசி இருவர் கைது. | ரேசன் அரிசி கடத்தல் | தினமணி |
| 2156. | 24.08.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை அருகேயுள்ள தேவராஜ் மகள் திவ்யா(21) வினோத்குமார் இருவரும் காதலித்தனர். இந்நிலையில் இருவருக்கும் பஞ்சாயத்தில் பேசி திருமணம் செய்து வைக்க முயற்சி. தனக்கு கட்டாய திருமணம் செய்துவைக்க முயற்சிப்பதாக சிவகங்கை மகளிர் காவல்நிலையத்தில் திவ்யா புகார். காவலர்கள் விசாரணைக்காக திவ்யாவை அழைத்ததால் மனமுடைந்த திவ்யா தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை & தற்கொலை | தினகரன் |
| 2157. | 24.08.2011 | **சேலம் மாவட்டம்:** தொண்டிப்பாளையம் அரசு நடுநிலைப்பள்ளியில் கட்டிடப்பணி நடைப்பெற்று வருகிறது. இப்பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகளை கட்டிடத்திற்கு தண்ணீர் ஊற்றச் சொல்வது, கழிப்பறைகளை சுத்தம் செய்யச்சொல்வதோடு, கல்வியை வளர்ப்பதற்கு வழங்கப்பட்ட லேப்டாப்பில் | வகுப்பறை வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாணவ, மாணவிகளுக்கு படங்களை போட்டு காண்பித்ததாக அப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் அதை படம் பிடித்து சிடியாக வெளியிட்டுள்ளனர். | | |
| 2158. | 24.08.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அடுத்த செம்பேடு கிராமத்தைச் சேர்ந்த முனுசாமி மகள் மீனா(34). மார்பில் கட்டி இருந்ததால் வேலூர் சிஎம்சி மருத்துவமனையில் அனுமதித்து அறுவை சிகிச்சை. மருத்துவரின் தவறான அறுவை சிகிச்சையால் நரம்பு பகுதியில் பாதிக்கப்பட்டு வலது கை செயலிந்ததாக மீனா புகார். | பெண்கள் மீதான வன்முறை & மருத்துவர்கள் அலட்சியம் | தினகரன் |
| 2159. | 24.08.2011 | **மதுரை மாவட்டம்:** கிழபச்சேரி ஓடையில் அனுமதியின்றி மணல் அள்ளிய டிராக்டர் பறிமுதல். காக்குவீரன், மாயாண்டி, கைது. | மணல் கொள்ளை | தினமலர் |
| 2160. | 24.08.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை குரவிக்காரத் தெருவைச் சேர்ந்த பாண்டியம்மாள் செல்வம், முத்துக்கிருஷ்ணன், ராஜா, பாலசுப்பிரமணியன், அன்பழகன் ஆகியோரிடம் ரூ. 2 லட்சம் பணம் கடன் வாங்கினார். ருபாய் 2 லட்சத்திற்கு பாண்டியம்மாளுக்கு சொந்தமான 10 லட்சம் மதிப்புள்ள நிலத்தை 5 பேரும் அபரிக்க முயன்றதாக பாண்டியம்மாள் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2161. | 24.08.2011 | **மதுரை மாவட்டம்:** பதூர் காவல்நிலைய ஏட்டாக இருந்த சேகர் போலீ ரசீது அச்சடித்து வசூலில் ஈடுபட்டதாக புகார். | லஞ்சம் | தினமலர் |
| 2162. | 24.08.2011 | **தேனி மாவட்டம்:** ஜெயமங்கலம், தேனி, பெரியகுளத்தில் உள்ள ரேசன் கடைகளில் தங்களை கடைக்காரர்கள் ஈவ்டீசிங் செய்வதாக திருநங்கைகள் புகார். | திருநங்கைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2163. | 25.08.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** மதுரை மாவட்ட பேரையூரில் பெண் காவலராக பணியாற்றும் சி.தேவி. ராஜதானிக்கோட்டை மேம்பாலத்தில் வரும் பொழுது பைக்கில் வந்த மர்ம நபர்கள் அவரது 10 பவுன் நகையை பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |
| 2164. | 25.08.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வத்தலக்குண்டில் உள்ள காருண்யா நிறுவனம் அனாதை மற்றும் வசியற்ற மாணவர்களுக்கு விடுதி நடத்தி வருகிறது. காருண்யா நிறுவன ஊழியர்கள் மின்னல்கொடி, சார்லஸ் ஆகியோர் விடுதி மாணவர்களை அடித்துத் துன்புறுத்துவதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 2165. | 25.08.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தில் உள்ள தனியார் பள்ளியில் பிளஸ் 1 படிக்கும் மாணவர்களுக்கான ஆய்வக பாட வகுப்பின் போது சில மாணவர்கள் ரசாயன கலவையை மாற்றி கலந்துவிட்டனர். பெற்றோர்களை | வகுப்பறை வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அழைத்து வருமாறு பள்ளி நிர்வாகம் உத்தரவு. பெற்றோரை அழைத்து வராத மாணவர்களை திருப்பி அனுப்பியது. மாணவர்கள் திருமங்கலம் காவல்நிலைய முற்றுகை. | | |
| 2166. | 25.08.2011 | **சென்னை மாவட்டம்:** கும்மிடிப்பூண்டி அருகே எளாவூர் பகுதியைச் சேர்ந்த ராமானுஜம் மகள் பிரமிளா(21) தலையாரிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த ஜெயன்(21) இருவரும் பதிவுத்திருமணம் செய்துக் கொண்டு அவரவர் பெற்றோர் வீட்டில் வாழ்ந்து வந்தனர். பிரமிளாவின் பெற்றோர் வீட்டைவிட்டுத் துரத்தினர். ஜெயனின் வீட்டிலும் பிரமிளாவை எற்க மறுப்பு. பிரமிளா ஜெயன் வீட்டு முன்பு தர்ண போராட்டம். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2167. | 25.08.2011 | **கோவை மாவட்டம்:** திண்டுக்கல் பொதுப்பணித்துறை குடியிருப்பபைச் சேர்ந்த அனிதா பீளமேட்டிலுள்ள பொறியியல் கல்லூரி மாணவி. அதே பகுதியைச் சேர்ந்த அருண்பிரசன்னா இருவரும் காதலித்தனர். அனிதா திருமணத்திற்கு மறுத்ததால் மனமுடைந்த அரண்பிரசன்னா அனிதாவை கத்தியால் குத்தி கொலை செய்ய முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினகரன் |
| 2168. | 25.08.2011 | **மதுரை மாவட்டம்:** செக்கானூரணி அருகே உள்ள பன்னியானைச் சேர்ந்த மலையாண்டி மனைவி ராதா(37). கணவன் மனைவி குடும்பத்தகராறில் முனமுடைந்த ராதா தீக்குளித்தத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 2169. | 25.08.2011 | **மதுரை மாவட்டம்:** முனிச்சாலை ரோடு ருக்மணி பாயைத்தைச் சேர்ந்த தேவேந்திரன் மனைவி அனுசுயா(62). அனுசுயாவின் நகையை பறித்து தப்பச்செல்ல முயன்ற வன்னீஸ்வரன் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2170. | 25.08.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சிறையில் கைதிகளை கழிப்பறைகளை சுத்தம் செய்யச் சொல்வதாக கைதிகள் புகார். | சிறைச்சாலை வன்மறை | தினமலர் |
| 2171. | 25.08.2011 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டி அருகே வைகை ஆற்றில் அனுமதியின்றி மணல் கடத்திய மூன்று மாட்டு வண்டிகள் பறிமுதல். ராஜேந்திரன், கருத்தபாண்டி, முருகன் கைது. | மணல் கொள்ளை | தினமலர் |
| 2172. | 25.08.2011 | **விருதநகர் மாவட்டம்:** ராஜபாளையம் எம்.பி.கே. புதுப்பட்டியைச் சேர்ந்த ஜெயசித்ரா(25). நெடுஞ்சாலை துறை விருதுநகர் உதவி கோட்ட அலுவலர் துரைராஜ் ஜெயசித்ராவிடம்ட ஆபாசமாக பேசியதாக ஜெயசித்ரா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2173. | 25.08.2011 | **நாமக்கல் மாவட்டம்:** குமாரபாளையம், காந்தி நகரைச் சேர்ந்த தண்டபாணி தனது | லஞ்சம் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலத்திற்குத் தனி பட்டா கேட்டு வி.ஏ.ஓ ராஜேந்திரனை அணுகினார் அவர் ரூபாய் 18 ஆயிரம் லஞ்சம் கேட்டதாகப் புகார். வி.ஏ.ஓ., ராஜேந்திரன் மற்றும் உதவியாளர் யேசு இருவரும் கைது. | | |
| 2174. | 26.08.2011 | **திருப்பூர் மாவட்டம்:** மதுரை மேலூர் பகுதியைச் சேர்ந்த சேனாதிபதி மகன் ஜோதிலிங்கம்(20) தாராபுரம் சாலை கே.செட்டிபாளைம் பகுதியில் பூபதி என்பவருக்கு சொந்தமான பனியன் கம்பெனியில் வேலை செய்தார். தனது சம்பள பாக்கியைக் கேட்ட ஜோதிலிங்கத்தை பூபதி மற்றும் அவரது சகோதரர்கள் கட்டிவைத்து அடித்துத் துன்புறுத்தியதாக ஜோதிலிங்கம் புகார். | --- | தினகரன் |
| 2175. | 26.08.2011 | **திருப்பூர் மாவட்டம்:** பல்லடம் வைரம் நகரைச்சேர்ந்த நாகராஜ் மகள் புவனேஸ்வரி(17) கோவை பி.என்.பாளையம்ரோடு அரசு பெண்கள் பாலிடெக்னிக்கல்லூரியில் ஐ.சி.ஈ. 3 ஆண்டு படித்து வந்தார். வகுப்புக்கு தாமதமாக வந்த புவனேஸ்வரியை ஆசிரியர் சுகந்திராணி கண்டித்ததால் முனமுடைந்த புவனேஸ்வரி கல்லூரி வளாக மாடியில் இருந்து கீழே குதித்துத் தற்கொலைக்கு முயற்சி. ஆசிரியையை டிஸ்மிஸ் செய்யகோரி மாணவிள் ஆர்ப்பாட்டம். | வகுப்பறை வன்முறை & தற்கொலை முயற்சி | தினகரன் |
| 2176. | 26.08.2011 | **மதுரை மாவட்டம்:** பேரையூர் பரியபூலாம்பட்டியைச் சேர்ந்த ராணுவ வீரர் முருகேசன் தனது நிலத்திற்கு பட்டா வாங்க பேரையூர் தாலுகா அலுவலக சர்வேயர் ராஜதுரையை அணுகினார். அவர் ரூ. 12 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக முருகேசன் புகார். | லஞ்சம் | தினமலர் |
| 2177. | 26.08.2011 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் அருகே அச்சம்பட்டியில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் நான்காம் வகுப்பு படிக்கும் மாணவன் காட்டுராஜா மற்றும் மூன்றாம் வகுப்பு படிக்கும் பெரியசாமி இருவரும் பள்ளிவாளகத்தில் விளையாடும் பொழுது காம்பெண்ட் சுவர் சரிந்து விழுந்து மாணவர்கள் இருவருக்கும் காயம். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2178. | 26.08.2011 | **சென்னை மாவட்டம்:** மும்மையைச் சேர்ந்த உதயா மனைவி பிரியா(20). உதாயவின் நண்பர் கிருஷ்ணாபாயுடன் சென்னைக்கு சுற்றுலா வந்த பிரியாவை கிருஷ்ணாபாய் விபச்சாரத்திற்கு ஈடுபடுத்த முயன்றதாக புகார். காணாத்தூரில் ரோந்து பணியின் போது காரில் கடத்திச் சென்று பிரியாவை | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினத்தந்தி |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாலியல் பலாத்காரம் செய்யமுயற்சித் போது காவலர்களால் பிரியா மீட்கப்பட்டார். | | |
| 2180. | 27.08.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடற்கரையில் ஆறு மாத பெண் குழந்தை இறந்த நிலையில் கரை ஒதுங்கியதாகப் புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2181. | 27.08.2011 | **திருச்சி மாவட்டம்:** ஸ்ரீரங்கம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனங்களை பதிவு செய்யவும், லைசென்ஸ் வழங்கவும், லஞ்சம் வாங்கிய இளநிலை எழுத்தர் வேணுகோபால்(45), உதவியாளர் கந்தசாமி(50) இருவரும் கைது. | லஞ்சம் | தினகரன் |
| 2182. | 27.08.2011 | **வேலூர் மாவட்டம்:** அரக்கோணம் அருகே அனந்தாபுரம் கிராமம் வழியாக செல்லும் கிருஷ்ணாபுர நதியில் அனுமதியின்றி மணல் அள்ளி வந்த டிராக்டரை மறித்த துணை தாசில்தார் தேவதாஸ்(56), விஏஓ சேகர்(50) மீது டிராக்டரை ஏற்றிக் கொலை செய்ய முயன்றதாக புகார். | மணல் கொள்ளை | தீக்கதிர் |
| 2183. | 27.08.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் நகராட்சி 21–வது வார்டைச் சேர்ந்தவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்காதை கண்டித்து போராடிய பொதுமக்கள் மீது காவலர்கள் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 2184. | 28.08.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரையைச் சேர்ந்த ஜெயகுமார் மனைவி லதா. மதுரை அரசு மருத்துவமனையில் லதாவுக்கு குழந்தை பிறந்தது. பிறந்த குழந்தையை திண்டுக்கல் பேகம்பூர் பகுதியைச் சேர்ந்த துர்க்காதேவி கடத்திச் சென்றதோடு பால்புகட்டும் போது குழந்தை இறந்ததாகப் புகார். துர்க்கதேவி கைது. | பெண்கள் மீதான வன்முறை & சிசுக்கள் மீதான வன்முறை | தினமணி |
| 2185. | 28.08.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அணைக்கட்டு அருகே உள்ள ஊணை வாணியம்பாடியைச் சேர்ந்த செண்பகவல்லி. மனித உரிமைகள் அமைப்பு மற்றும் பேஜ்தொண்டு நிறுவன மேலாளரர் பிலீப் மற்றும் சந்பீம் பள்ளி தாளாளரும், விடதலை சிறுத்தைகள்கட்சி மாநில கொள்ளை பரப்புசெயலாளர் கோபாலனும் குளிர்பானத்தில் மயக்கமருந்து கலந்து தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததாக பிலிப் மற்றும் கோபலான் மீது செண்பகவல்லி புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 2186. | 28.08.2011 | **மதுரை மாவட்டம்:** முடக்குச்சாலையைச் சேர்ந்த லதா வேலைக்குச் செல்லும் போது பெத்தானியபுரத்தைச் சேர்ந்த மரியராஜ்(29) கேலி செய்ததாக புகார். தட்டிக் கேட்கச் சென்ற லதாவின் தாயாருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக மரியராஜ் கைது. | பெண்கள் மீதான வன்முறை & ஈவ்டீசிங் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2187. | 28.08.2011 | **மதுரை மாவட்டம்:** நத்தம் சாணார்பட்டியைச் சேர்ந்த இஸ்மாயில்(30) மனைவி ரம்ஜான்பேகம்(27). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த இஸ்மாயில் ரம்ஜான்பேகத்தை கத்தியால் குத்தியதாக கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2188. | 28.08.2011 | **மதுரை மாவட்டம்:** ஏழுமலை அருகே மல்லப்புரத்தைச் சேர்ந்த ராமர் மனைவி சுமதி(28). உசிலம்பட்டி அருகே மெய்யனூத்துப்பட்டியைச் சேர்ந்த கருப்பையா மற்றும் அவரது உறவினர்கள் சுமதி மற்றும் குழந்தையை கடத்திச் சென்றதாக ராமர் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2189. | 28.08.2011 | **கோவை மாவட்டம்:** ரேஸ்கோர்ஸ் நீதிபதிகள் குடியிருப்புக்கு பின்புறம் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி உள்ளது. விடுதியில் தங்கியிருந்து 6,7,8, மாணவர்கள் 15 பேரை விடுதி வார்டன் விடுதி கழிவறைகளை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுத்தியதாக புகார். | வகுப்பறை வன்முறை & தலித்துகள் மீதான வன்முறை | தினகரன் |
| 2190. | 29.08.2011 | **விருதுநகர் மாவட்டம்:** கள்ளிக்குடி அருகே பேய்க்குளத்தில் நடுநிலைப்பள்ளி வளாகத்திற்குள் பாழடைந்த கட்டிடத்தில் அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டிடத்தில் 3 முதல் 5 வயது குழந்தைகள் படிப்பதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2191. | 29.08.2011 | **மதுரை மாவட்டம்:** திருவாதவூரில் அரசு உயர்நிலைப் பள்ளி அருகே மதுக்கடை செயல்படுவதாகவும் மதுக்கடையை வேறு இடத்திற்கு மாற்றக்கோரி மாணவர்கள் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என மாணவர்கள் மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு. | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2192. | 29.08.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு ஈ.பி.பி நகரைச் சேர்ந்த பழனியப்பன் மனைவி நாச்சம்மாள்(65). வீட்டில் தனியாக இருந்த நாச்சம்மாளை கொலை செய்ததோடு அவர் அணிந்திருந்த 6 பவுன் நகையை மர்ம நபர்கள் கொள்ளை அடித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 2193. | 29.08.2011 | **கரூர் மாவட்டம்:** கீழ ஊத்தாம்பட்டி பகுதியைச் சேர்ந்த விஜயா(25). சேத்துமடையைச் சேர்ந்த கவுதமன்(30). இருவரும் காதலித்துத் திருமணம் செய்துக் கொண்டனர். இரண்டு குழந்தைகள் உள்ள நிலையில் விஜயாவை ஏமாற்றி வேறு பெண்ணை திருமணம் செய்ய முயற்சிப்பதாக கவுதமன் மீது விஜயா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2194. | 29.08.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** காஞ்சிபுரம் அருகே உள்ள ஓரிக்கை என்ற கிராமத்தைச் | பெண்கள் மீதான | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேர்ந்த பரசுராமன் மகள் செங்கொடி(20). ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட 3 பேரின் உயிரை காப்பாற்ற காஞ்சி தாலுகா அலுவலகத்தின் முன்பு செங்கொடி தீக்குளித்துத் தற்கொலை. | வன்முறை & தற்கொலை | |
| 2195. | 29.08.2011 | **கடலூர் மாவட்டம்:** நெய்வேலி அடுத்த வானாதிராயபுரம் கிராமத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன் மகள் கனிகா(10). கடலூரில் உள்ள தனியார் மெட்ரிக் பள்ளியில் 5ம் வகுப்பு படிக்கும் மாணவி கனிகா பள்ளிக்குச் சென்ற கனிகாவைக் காணவில்லை என புகார். காணாமல் போன பள்ளி மாணவி 11 நாட்களுக்கு பிறகு தலை துண்டான நிலையில் கிணற்றில் கிடந்ததாகப் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 2196. | 29.08.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே உள்ள கீழபுதூரைச் சேர்ந்த போஸ் மனைவி செல்வி(49). வீட்டில் தனியாக இருந்த செல்வியிடம் நகை பாலீஸ் செய்து தருவதாக மர்ம நபர்கள் ஏமாற்றி 3 பவுன் நகையை கொள்ளையடித்துச் சென்றதாக செல்வி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2197. | 30.08.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் நல்ல குற்றாலம் தெருவைச் சேர்ந்த சமுத்திரகனி(40) மனைவி பாண்டீவரி(30). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்துவதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தமிழ்சுடர் |
| 2198. | 30.08.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** தேவகோட்டை காவேரியம்மாள் நகர் கல்லூரி சாலையில் தனியார் பள்ளி நிர்வாகி சுப்பிரமணியன் மகன் சுந்தரம்(37) மனைவி சுதா(35). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டுத் துன்புறுத்தியதோடு தன் மீது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொலை செய்ய முயற்சித்ததாக சுதா புகார். சுந்தரம் கைது. | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தமிழ்சுடர் |
| 2199. | 30.08.2011 | **மதுரை மாவட்டம்:** நாகமலை புதுக்கோட்டையைச் சேர்ந்த ஜெயக்குமார் மனைவி சரண்யா(25). கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்துவதாக சரண்யா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினகரன் |
| 2200. | 30.08.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஆர்.எஸ்.லெட்சுமிபுரம் பகுதியைச் சேர்ந்த கலையரசி. தர்மபுரி ஆரதஅள்ளி கிராமத்தைச் சேர்ந்த சென்னை உயர்நீதிமன்ற வக்கீல் சசி (எ) ரமேஷ்குமார். இருவரும் திருமணமாகி 4 மாதங்கள் ஆன நிலையில் கணவர் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்துவதாக கலையரசி புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 2201. | 30.08.2011 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை இன்ஸ்பெக்டர் அசோகன் ரோந்துப்பணியில் ஈடுபட்ட போது பணியில் இருந்த ஏட்டு பொன்மாடசாமி(45) மற்றும் ஆயுதப்படையில் பணியாற்றி தேவகோட்டையில் டூட்டி பார்த்த சேதுராமன்(48) இருவரும் மதுபோதையில் பணியில் இருந்ததால் பணிநீக்கம். | குடிபோதையில் காவலர்கள் | தினகரன் |
| 2202. | 30.08.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஊத்தங்கரை அடுத்த கொண்டம்பட்டியைச் சேர்ந்த சரவணன் மனைவி வசந்தி(35). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாக வசந்தி புகார். வரதட்சணை புகாரில் சரவணனை கைது செய்யாமல் இருக்க எஸ்.ஐ சித்ரா ரூ. 5,000 லஞ்சம் கேட்டதாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை & லஞ்சம் & காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 2203. | 30.08.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** திருக்கோவிலூர் அடுத்த வெள்ளம்புத்தூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி உதவி ஆசிரியர் நடராஜன். ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவி நளினியிடம் சில்மிஷம் செய்ததோடு மிரட்டியதாக நடராஜன் மீது புகார். | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 2204. | 30.08.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** கூட்டாம்புளியைச் சேர்ந்த ராதா லட்சுமி கர்ப்பப்பை கோளாறு காரணமாக தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதி. அவரைப் பார்க்க வந்த அவரது மகள் சாவித்திரி(13) கழிவறைக்குச் சென்றுள்ளார். அங்கு பக்கெட்டில் இருந்த திரவத்தை தண்ணீர் என நினைத்து உபயோகித்தார். மருத்துவமனை ஊழியர்களின் கவனக்குறைவால் பக்கெட்டில் இருந்த ஆசிட்டை உபயோகித்த மாணவி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதி. | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2205. | 30.08.2011 | **மதுரை மாவட்டம்:** மகபூப்பாளையத்தைச் சேர்ந்த பார்த்தசாரதி மகள் 15 வயது மகள். மனைவி இறந்ததால் தனது சகோதரி வீட்டில் வளர்ந்த தனது மகளை தங்கையின் மகன் பாலியல். சிறுமி 3 மாத கர்ப்பமாக இருப்பதாக பார்த்தசாரதி புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 2206. | 30.08.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கமுதி வல்லத்தைச் சேர்ந்த ராஜகோபால்(57) இதே கிராமத்தில் வார்டு உறுப்பினர். மீட்டாங்குளம் கோயிலில் சாமி கும்பிடும் பிரச்சனையில் தலையிட்டதால் இவர் உட்பட இவரது உறவினர்கள் 12 குடும்பங்களைச் | கட்டப் பஞ்சாயத்து & சமூகப் புறக்கணிப்பு | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேர்ந்தவர்களை மீட்டாங்குளம் கிராமத்தினர் ஊரைவிட்டு ஒதுக்கிவைத்தாக புகார். | | |
| 2207. | 31.08.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரவை பேரூராட்சி. இங்குள்ள சத்தியமூர்த்தி நகரில் மேற்கு ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் 1.ம் வகுப்பு முதல் 5 ம் வகுப்பு வரை உள்ளது. இப்பள்ளிக் கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் குழந்தைகளின் நலன் கருதி ஆசிரியர் அருகே உள்ள கலையரங்கில் வகுப்புகளை நடத்தி வருகின்றனர். | வகுப்பறை வன்முறை | தீக்கதிர் |
| 2208. | 31.08.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே பாதி எரிந்த நிலையில் 20 வயது மதிக்கத்தக்க பெண் பிணமாகக் கிடந்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |
| 2209. | 31.08.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வம் மனைவி ஜெயபாரதி. செல்வம் மத்திய பாதுகாப்புபடையில் பணிபுரிந்து பணிநீக்கம் செய்யப்பட்டதாகவும், அவர் தன்னை அடித்துத் துன்புறுத்தி விவகாரத்து கேட்பதாக மதுரை ஐ.ஜியிடம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |
| 2210. | 31.08.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரம் கமுதி அருகே உள் ஒ. கரிசல்குளம் கிராமத்தைச் சேர்ந்த தி.மு.க. தொண்டரணி அமைப்பாளர் பாண்டி. கேவிலாங்குளம், தோப்படைப்பட்டி ஆற்றில் 20 டன் மணலை கடத்தி ஒ.கரிசல்குளம் கண்மாயில் பதுக்கி வைத்திருந்ததாக கைது. | மணல் கொள்ளை | தினமலர் |
| 2211. | 31.08.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை, பெருங்குடியில், எவரான் எஜுகேஷன் லிட் கல்வி நிறுவனம் வி.சாட் மற்றும் இன்டர்நெட் மூலம் பள்ளி மாணவர்களுக்கு கல்வி பயிற்சி அளித்து வருகிறது. இந்நிறுவனத்தின் மேலாண் இயக்குனா கிஷோர், வருமானவரித்துறை நடவடிக்கை எடுக்காமல் இருக்க உத்தம்சந்த், போரா என்ற ஆடிட்டர் மூலம், பேச்சுவார்த்தை நடத்தி கூடுதல் கமிஷனர் ரவீந்திரா ரூ. 50 லட்சம் லஞ்சம் வாங்கியதாக ரவீந்திரா கைது. | லஞ்சம் | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்